بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 14

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

3 ரமலான் 1437 ஹிஜ்ரி கமரி 9 இஹ்ஸான் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 9 ஜூன் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

எதற்கு தவ்ஹீது என்று பெயரோ, எது இரட்சிப்பிற்கு அடித்தளமாக இருக்கிறதோ அது காலத்தின் நபி அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு அன்னாருக்கு கட்டுப்பட்டு நடக்காமல் கிடைக்க முடியாது. தூதருக்குக் கட்டுப்படாமல் காய்ந்துபோன தவ்ஹீது மட்டும் எதற்கும் உதவாது. மாறாக, உயிரற்ற மரணித்தவர் போன்றே அது இருக்கும்.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இந்த விஷயத்தை ஏற்கனவே நாம் கூறி விட்டோம். அதாவது, எதற்கு தவ்ஹீது என்று பெயரோ, எது இரட்சிப்பிற்கு அடித்தளமாக இருக்கின்றதோ, எது ஷய்த்தானிய தவ்ஹீதை விட்டும் தனித்து நிற்கின்றதோ அது காலத்தின் நபி அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு அன்னாருக்குக் கட்டுப்பட்டு நடக்காமல் கிடைக்க முடியாது. தூதருக்குக் கட்டுப்படாமல் காய்ந்து போன தவ்ஹீது மட்டும் எதற்கும் உதவாது. மாறாக, அது உயிரற்ற மரணித்தவர் போன்றே இருக்கும். திருக்குர்ஆன் நாம் கூறியிருப்பதற்கு ஏற்ப மனிதனின் இரட்சிப்பை தூதருக்குக் கட்டுப்பட்டு நடப்பதுடன் தொடர்புபடுத்திக் கூறி இருக்கின்றதா? அல்லது திருக்குர்ஆனின் போதனை அதற்கு எதிராக இருக்கின்றதா? என்பதை மட்டும் நான் எடுத்துக் கூற வேண்டியதுள்ளது. எனவே, இந்த உண்மையைப் புரிய வைப்பதற்காக நாம் கீழ்காணும் திருக்குர்ஆன் வசனங்களை எடுத்து வைக்கின்றோம்.

(1) قوله تعالى- قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ

பொருள்: அல்லாஹ்வுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள் என்று நீர் கூறுவீராக! (24:55)

இது ஏற்றுக் கொள்ளப்பட்ட தெளிவான விஷயமாகும். இறைவனின் கட்டளைகளை மீறி நடப்பது பாவமும் நரகத்தில் நுழைவதற்கு காரணமாகவும் இருக்கின்றது. இந்த இடத்தில் இறைவன் எவ்வாறு தனக்கு கட்டுப்பட்டு நடக்குமாறு கட்டளையிட்டுள்ளானோ அவ்வாறே தூதருக்கு கட்டுப்பட்டு நடக்குமாறு கட்டளையிட்டுள்ளான். எனவே, எந்த நபர் இந்தக் கட்டளையிலிருந்து முகம் திருப்புகின்றாரோ அவர் எத்தகைய குற்றம் புரிந்துள்ளார் என்றால் அதற்கு தண்டனை நரகமாகும்.

(2) قوله تعالى- يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تُقَدِّمُوْا بَيْنَ يَدَيِ اللّٰهِ وَرَسُوْلِهٖ وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளையை விட அதிகமாக எதையும் பேசாதீர்கள். அதாவது முற்றிலும் அல்லாஹ் மற்றும் தூதரின் கட்டளைக்கேற்ப நடங்கள். கட்டுப்படாமல் இருப்பதற்கு அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பனும் நன்கு அறிபவனுமாவான். (49:2)

எந்த நபர் முழுக்க முழுக்க தனது காய்ந்துபோன தவ்ஹீதின் மீது நம்பிக்கை வைத்து (உண்மையில் அது தவ்ஹீதும் அல்ல) தூதரை விட்டும் தன்னிறைவு பெற்றவராக தன்னைக் கருதிக் கொள்கின்றாரோ, தூதரிடமுள்ள உறவைத் துண்டித்துக் கொள்கின்றாரோ, முற்றிலும் அவரை விட்டும் பிரிந்து தனியாக சென்று விடுகின்றாரோ அவமரியாதையாக நடந்து கொண்டவாறு அவருக்கு முன்னால் தனது பாதத்தை வைக்கின்றாரோ அப்படிப்பட்டவர் இறைவனுக்குக் கட்டுபடாதவராவார். இரட்சிப்பைப் பெறாத துர்பாக்கியசாலியாவார் என்பது தெளிவாகி விட்டது.

(3) قوله تعالى- مَنْ كَانَ عَدُوًّا لِّلّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَرُسُلِهٖ وَجِبْرِيْلَ وَمِيْكٰلَ فَاِنَّ اللّٰهَ عَدُوٌّ لِّلْكٰفِرِيْنَ

அல்லாஹ்வுக்கும் அவனது வானவர்களுக்கும், அவனது தூதர்களுக்கும், ஜிப்ரீலுக்கும், மீக்காயிலுக்கும் எவர் பகைவராக உள்ளாரோ நிச்சயமாக அத்தகு நிராகரிப்பவர்களுக்கு அல்லாஹ்வும் பகைவனாவான். (2:99)

ஒரு நபர் காய்ந்துபோன தவ்ஹீதை மட்டும் ஏற்றுக் கொள்கின்றார். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பொய்ப்படுத்து-கின்றார் என்றால் அவர் உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பகைவராவார். எனவே, இந்த வசனத்திலுள்ள கருத்திற்கு ஏற்ப இறைவன் அவரது பகைவனாவான். அவர் இறைவனின் பார்வையில் நிராகரிப்பவர் ஆவார். அவ்வாறிருக்கும்போது அவர் எவ்வாறு இரட்சிப்பைப் பெற முடியும்?

(4) قوله تعالى- يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِيْ نَزَّلَ عَلٰى رَسُوْلِهٖ
وَالْكِتٰبِ الَّذِيْۤ اَنْزَلَ مِنْ قَبْلُ ؕ وَمَنْ يَّكْفُرْ بِاللّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ وَالْيَوْمِ الْاٰخِرِ
فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ بَعِيْدًا

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்விடத்தும் அவனுடைய தூதரிடத்தும் அவன் தனது தூதருக்கு இறக்கிய இவ்வேதத்திடத்தும் (அதாவது திருக்குர்ஆனின் மீதும்) இதற்கு முன்னர் அவன் இறக்கிய வேதத்திடத்தும் (அதாவது தவ்ராத் போன்றவற்றின் மீதும்) நம்பிக்கை கொள்ளுங்கள். அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நிராகரிக்கின்றவன் உண்மையை விட்டும் மிகவும் தொலைவில் சென்று விட்டான். (அதாவது இரட்சிப்பைப் பெற மாட்டான்). (4:137)

(5) قوله تعالى- وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَّلَا مُؤْمِنَةٍ اِذَا قَضَى اللّٰهُ وَرَسُوْلُهٗۤ اَمْرًا اَنْ يَّكُوْنَ لَهُمُ
الْخِيَرَةُ مِنْ اَمْرِهِمْ ؕ وَمَنْ يَّعْصِ اللّٰهَ وَرَسُوْلَهٗ فَقَدْ ضَلَّ ضَلٰلًا مُّبِيْنًا

பொருள்: அல்லாஹ்வும் அவனது தூதரும் (ஏதாவது) ஒரு கட்டளையிட்டால் (அதன் பின்னர்) நம்பிக்கை கொண்ட எந்த ஆணுக்கும், நம்பிக்கை கொண்ட எந்தப் பெண்ணுக்கும் அந்தக் கட்டளையை மறுப்பதற்கான உரிமையில்லை. அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படாதவர் உண்மையை விட்டும் வெகு தொலைவில் சென்று விட்டார். (அதாவது இரட்சிப்பைப் பெறாதவராக ஆகி விட்டார். ஏனென்றால் இரட்சிப்பு உண்மையை சார்ந்திருப்பவர் -களுக்கே கிடைக்கின்றது). (33:37)

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

உங்களது வீட்டில் குடியிருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது என்றால், உங்களது பொருள் அதிகரித்திருக்கின்றது என்றால் ஜமாஅத்திற்கு வெளிப்படையாக கட்டடங்களைக் கட்டுவதில் அல்லாஹ் விரிவான நிலையை வழங்கியுள்ளான் என்றால், நிச்சயமாக இந்த விஷயங்களுக்காக நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துபவர்களாக ஆக வேண்டும்.

அல்லாஹ் உங்களுக்கு அல்லது உங்கள் மூதாதையர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கினான். இது அல்லாஹ்வின் குறிப்பான அருளாகும். அல்லாஹ் உங்களது ஏதோவொரு நன்மையின் காரணமாக இந்த அருளை உங்கள் மீது செய்துள்ளான். ஆனால், அல்லாஹ்வின் இந்த அருள்களை தொடர்ந்து நீடிக்கச் செய்வதற்காக இந்த நன்மைகளில் முன்னேறுவதும் நமது நிலைமைகளை முன்பை விட சிறந்ததாக ஆக்க வேண்டியதும் அவசியமானதாகும்.

ஒவ்வொரு மட்டத்தைச் சார்ந்த பல்வேறு வகையிலுள்ள மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்துள்ளனர். அவர்கள் பிறப்பால் அஹ்மதிகளாக இருந்தாலும் அல்லது பிறகு பைஅத் செய்து வந்திருந்தாலும் அல்லது இங்கு இடம் பெயர்ந்து வந்திருந்தாலும் அல்லது இங்கு வசிப்பவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்த விஷயங்களைச் சிந்திக்க வேண்டும். இப்போது அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கேற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரிடம் பைஅத் செய்ததற்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல்வேறு கட்டளைகளின் ஒளியில் நன்மை, இறையச்சத்தில் நிலைத்திருப்பது, மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது, நல்லொழுக்கத்தில் சிறந்த நிலையை உருவாக்குவது, தப்லீக் செய்வது, ஈமானில் முன்னேற்றத்தைப் பெறுவதற்காக வீணானவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வது போன்ற விஷயங்களைப் பற்றிய முக்கிய போதனைகள்.

எவர்கள் நாங்கள் அதிகமாக துஆ செய்தோம். நீண்ட துஆக்களைச் செய்தோம். ஆனால், அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று கூறுகின்றனரோ அவர்கள் தமது உள்ளங்களை அலசிப் பார்க்க வேண்டும். எங்காவது ஏதாவது மறைவான ஷிர்க் நம்மிடம் இருக்கின்றதா? ஏதாவதொரு வகையிலுள்ள பித்அத்தான காரியங்களில் அவர்கள் ஈடுபட்டுள்ளனரா? அல்லது அல்லாஹ் தடுத்த ஏதாவதொரு விஷயத்தை அவர்கள் செய்கின்றாரா? என்று அவர்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **டென்மார்க்கிலுள்ள நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலில் 6 மே 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு ஹிஜ்ரத் மாதம் 6 -ஆம் தேதி ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ إِيَّاكَ نَعْبُدُ

وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஏறக்குறைய 11 ஆண்டுகளுக்கு முன்பு நான் இங்கு வந்திருந்தேன். காலம் கடந்து விட்டது தெரியவில்லை. பலர் சிறுவர்களாக இருந்தனர். இப்போது அவர்கள் இளைஞர்களாகியிருப்பர். சிலர் குழந்தைகளின் தாய் தந்தையராக ஆகியிருப்பர். வெளிப்படையான முறையில் இங்குள்ள ஜமாஅத்தின் மீது அல்லாஹ் பேரருள் செய்துள்ளான். பள்ளிவாயிலுடன் சேர்த்து ஒரு மிகப்பெரிய ஹால், அலுவலகங்கள், நூலகம் மற்றும் ஏனைய வசதிகள் கிடைத்திருக்கின்றது. இவ்வாறே பள்ளிவாயிலுக்கு முன்னால் நாம் வாங்கிய வீடும் விரிவடைந்து விட்டது. பிரச்சாரகரின் தங்குமிடம், விருந்தினர் இல்லம் மற்றும் ஒரு பெரிய ஹால் நமக்கு கிடைத்திருக்கின்றது. இவை எல்லாம் அல்லாஹ்வின் அருள்களாகும். உங்களது வீட்டில் குடியிருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது என்றால், உங்களது பொருள் அதிகரித்திருக்கின்றது என்றால் ஜமாஅத்திற்கு வெளிப்படையாக கட்டடங்களைக் கட்டுவதில் அல்லாஹ் விரிவான நிலையை வழங்கியுள்ளான் என்றால், நிச்சயமாக இந்த விஷயங்களுக்காக நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துபவர்களாக ஆக வேண்டும்.

இதற்கு நாம் எவ்வாறு நன்றி தெரிவிக்க வேண்டும்? இதன் எதிர்பார்ப்புகள் என்ன? நாம் இந்தக் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்பவர்களாக இருக்கின்றோம். ஈமான் கார்த்திகை நட்சத்திரம் அளவில் சென்று விட்டாலும் அதனை அவர் திரும்பக் கொண்டு வருவார் என்று எந்த நபரைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்களோ அவரைத் தான் நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்ற விஷயத்தில் நாம் உறுதியாக நம்பிக்கை வைத்துள்ளோம். பிறகு நாம் நமது சிந்தனைகளையும் நம்பிக்கை கொண்டவர்களின் சிந்தனைகளாக ஆக்க வேண்டும். நாம் வெளிப்படையாக நன்றி செலுத்தி விட்டு அல்லது நாவால் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி விட்டு மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. மாறாக, அல்லாஹ் கூறியுள்ள கட்டளைகளுக்கேற்ப நாம் செயல்படுகின்றோமா? என்பதை நாம் பார்க்க வேண்டும். நாம் நம்பிக்கை கொண்டவரைப் போன்று வாழ்கின்றோமா? அதைப் பற்றிய விளக்கத்தை அல்லாஹ்வும் அவனது தூதரும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அதனை இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். நான் 11 வருடங்களுக்கு முன்னர் இங்கு வந்த போதும் இங்குள்ள அஹ்மதிகளுக்கு இதைப் பற்றி கவனமூட்டினேன். பெரும்பாலும் நான் இதன் பக்கம் கவனமூட்டிக் கொண்டிருக்கின்றேன். அல்லாஹ் நமக்கு M.T.A –வின் வசதியை, அருட்கொடையை வழங்கியுள்ளான். இதன் மூலமாக நான் கூறும் விஷயங்கள் ஒவ்வோர் அஹ்மதியிடமும் சென்று சேர்கிறது. நிபந்தனை என்னவென்றால், அவர்கள் நான் கூறுவதைக் கேட்பதற்கு விரும்ப வேண்டும்.

எவ்வாறிருப்பினும், அல்லாஹ் உங்களுக்கு அல்லது உங்கள் மூதாதையர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கினான் என்று நான் கூறியிருந்தேன். இது அல்லாஹ்வின் குறிப்பான அருளாகும். அல்லாஹ் உங்களது ஏதோவொரு நன்மையின் காரணமாக இந்த அருளை உங்கள் மீது செய்துள்ளான். ஆனால், அல்லாஹ்வின் இந்த அருள்களை தொடர்ந்து நீடிக்கச் செய்வதற்காக இந்த நன்மைகளில் முன்னேறுவதும் நமது நிலைமைகளை முன்பை விட சிறந்ததாக ஆக்க வேண்டியதும் அவசியமானதாகும். அவ்வாறில்லாமல் நமது பாதங்கள் நின்று விட்டால் அல்லது மார்க்க விஷயங்களில் கவனமற்ற நிலை உருவாகி விட்டால் அல்லது உருவாகிக் கொண்டிருக்கின்றது என்றால், நாம் நமது சந்ததிகளையும் மார்க்கத்தை விட்டு விலக்கி வைப்பவர்களாக ஆக்கி விடுவோம். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்த அந்த சிறப்பான அருளிலிருந்து அவர்களை விலக்கி வைப்பவர்களாக நாம் ஆகி விடுவோம் என்பதை எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையும் அன்னாரை ஏற்றுக் கொள்வதும் ஆகும். எவர்களின் மூதாதையர்கள் அஹ்மதிகளாக ஆனார்களோ அவர்களின் சந்ததிகள் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்று விட்டால் பிறகு அவர்கள் தமது பெரியவர்களின் துஆக்களிலிருந்து பலன் பெறாதவர்களாக ஆகி விடுவர். அல்லாஹ் நன்மைக்கான நற்கூலியை வழங்குகின்றான்; கண்டிப்பாக வழங்குகின்றான். முழுக்க முழுக்க அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக ஒரு நன்மையை ஒருவர் செய்திருந்தால் அவரது சந்ததிகளும் அதன் அருள்களைப் பெறுவர். ஆனால், அத்துடன் நீங்கள் உங்களது செயல்களையும் சரி செய்ய வேண்டியது வரும் என்றும் அல்லாஹ் கூறுகின்றான். அதன் மூலம் அல்லாஹ்வின் அருள்கள் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்க வேண்டும். எவர்களது முன்னோர்களான பெரியவர்கள் அஹ்மதிகளாக ஆனார்களோ அவர்கள் தமது பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றினர். பிறகு இந்த உலகை விட்டுப் பிரிந்து சென்று விட்டனர். அவர்களது சந்ததிகளும் இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்ற விருப்பத்துடனும் துஆவுடனும் அவர்கள் இந்த உலகை விட்டுப் பிரிந்து சென்றனர்.

எனவே, உங்களில் பெரும்பாலார் இதைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமானதாகும். நாம் அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களாக இருக்கின்றோமா என்ன? நமது பெரியவர்கள் இதைப் பற்றி நமக்கு போதித்தனர். நமது பெரியவர்கள் எந்த வழிகளில் நாம் செல்ல வேண்டும் என்று விரும்பினார்களோ அவ்வழியில் சென்று நாம் பைஅத் உடன்படிக்கையை உண்மையில் நிறைவேற்றுகின்றோமா என்று நாம் ஆய்வு செய்து பார்க்க

வேண்டியது அவசியமானதாகும் அல்லது நாம் மரபு வழியாக மட்டும் நமது பெரியவர்களின் மார்க்கத்தில் நிலைத்து நிற்கின்றோமா? உறவினர்கள் மற்றும் சமுதாயத் தொடர்புகளின் காரணமாக மட்டும் நாம் ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றோமா? என்பதை ஆய்வு செய்து பார்க்கவேண்டும். அவ்வாறே எவர்கள் தாமாகவே அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றனரோ அவர்கள், நாம் நமது ஈமானில் முன்னேற்றமடைந்து நமது செயல்களைச் சிறந்ததாக ஆக்குவதற்கு முயற்சி செய்தோமா? என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும் அல்லது நாம் இந்த முயற்சியை செய்து கொண்டிருக்கின்றோமா அல்லது அது ஒரு தற்காலிக உறவுதானா? அதன் காரணமாகத்தான் நாம் ஏற்றுக் கொண்டோமா? ஏதாவதொரு விஷயத்தின் தாக்கத்திற்கு ஆளாகி நாம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டோமா? முதலில் எங்கு நின்றோமோ இப்போது வரை அங்குதான் நின்று கொண்டிருக்கின்றோமா? என்பதை நாம் ஆய்வு செய்ய வேண்டும். நமது ஒவ்வொரு பாதமும் முன்னேற்றத்தின் பக்கம் செல்லும்போதுதான் நமக்கு பலன் கிடைக்கும். எவர்கள் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளுக்கு இடம் பெயர்ந்து வந்துள்ளனரோ அவர்களின் சிறந்த நிலைமையானது, அவர்களை மார்க்கத்தை விட்டும் விலக்கி எங்கோ தொலைவில் கொண்டு சென்று விடவில்லையே என்பதை தொடர்ந்து அவர்கள் பார்த்து வர வேண்டும். ஐரோப்பிய முன்னேற்றத்தின் தாக்கத்திற்கு ஆளாகி அவர்கள் மார்க்கத்தை மறந்து விட்டார்களா? என்று பார்க்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் இங்கு கொஸோவோ கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் வந்துள்ள பல மக்கள் இருக்கின்றனர். அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். நம் மீது அல்லாஹ் பேரருள் புரிந்துள்ளான் என்பதை அவர்களும் நினைவில் கொள்ள வேண்டும்.

சுருக்கமாக, இங்கு பல வகையான மக்கள் உள்ளனர். ஒவ்வொரு மட்டத்தைச் சார்ந்த பல்வேறு வகையிலுள்ள மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்துள்ளனர். அவர்கள் பிறப்பால் அஹ்மதிகளாக இருந்தாலும் அல்லது பிறகு பைஅத் செய்து வந்திருந்தாலும் அல்லது இங்கு இடம் பெயர்ந்து வந்திருந்தாலும் அல்லது இங்கு வசிப்பவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்த விஷயங்களைச் சிந்திக்க வேண்டும். இப்போது அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கேற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரிடம் பைஅத் செய்ததற்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும்.

முதலில் நான் கூறியது போன்று பிறப்பால் அஹ்மதிகளாக இருப்பவர்களும் பழைய அஹ்மதிகளும் புதிதாக வந்திருப்பவர்களும் ஒவ்வோர் அஹ்மதி ஆணும் பெண்ணும் அவர்கள் பைஅத்திற்கான உரிமையைச் செலுத்துகின்றனரா? அல்லது உரிமையைச் செலுத்துவதற்கு முயற்சி செய்கின்றனரா? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம் மீது சுமத்தியுள்ள பொறுப்புகளை நிறைவேற்ற முயற்சி செய்கின்றனரா? நமது நிலைமைகளை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைக்கேற்ப வடிவமைத்துக் கொள்ள முயற்சி செய்கின்றனரா? நாம் நமது பிள்ளைகளுக்கு இந்தப் போதனைகளுக்கேற்ப தர்பிய்யத் வழங்குவதற்கு முயற்சி செய்கின்றோமா? அவர்களிடம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குகின்ற உணர்வை ஆரம்பத்திலிருந்தே உருவாக்கி இருக்கின்றோமா? நமது செயல்கள் இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப அமைந்து அவை நமது பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்கின்றனவா? நமது தொழுகைகளும், இறை வணக்கங்களும், நமது ஒவ்வொரு செயலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் கூறியுள்ள போதனைகளுக்கேற்ப இருக்கின்றதா? என்பதை நம்மில் ஒவ்வொருவரும் தாமே ஆய்வு செய்து பார்த்து, அதிலிருந்து பலன் பெற முடியும். இந்த விஷயங்களின் ஆழத்தை அறியவும் உங்களது ஆய்வுகளுக்கான சிறந்த அளவுகோலை நிர்ணயிப்பதற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். இப்போது நான் அவற்றிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடமிருந்து எதிர்பார்க்கின்ற சில விஷயங்களை உங்களுக்கு எடுத்துக் கூறுவேன்.

ஒரு சபையில் தமது ஜமாஅத்திற்கு போதனை வழங்கியவாறு மிகவும் வேதனையுடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ''இருள் நிறைந்த இந்தக் காலக்கட்டத்தில் எல்லா பக்கமும் வழிகேடு, கவனமற்ற நிலை ஆகியவற்றின் காற்று வீசிக் கொண்டிருக்கும் போது நமது ஜமாஅத் கண்டிப்பாக இறையச்சத்தைக் கடைபிடிக்க வேண்டும். உலகின் நிலை எவ்வாறிருக்கின்றது என்றால், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மதிப்பில்லாமல் போய் விட்டது. அவர்கள் உரிமைகளைச் செலுத்துவது மற்றும் வஸிய்யத்தை நிறைவேற்றுவதை பொருட்படுத்தாமல் இருக்கின்றனர்.''

தங்களது பொறுப்பிலுள்ள விஷயங்களையும் நிறைவேற்றுவதில்லை. அவர்கள் செய்த வஸிய்யத்தையும் நிறைவேற்றாமல் இருக்கின்றனர். ''உலகம் மற்றும் அதன் பணிகளில் அளவு கடந்து அவர்கள் மூழ்கியுள்ளனர். உலக விஷயங்களில் கொஞ்சம் இழப்பு ஏற்படுவதைக் கண்டாலும் அதைப் பார்த்து மார்க்கத்தின் பகுதியை அவர்கள் கை விட்டு விடுகின்றனர்.'' அப்போது மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்குப் பதிலாக உலகத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றனர். மார்க்கத்தைக் கை விட வேண்டியது வந்தாலும் அதன் மூலம் உலக இழப்புகளிலிருந்து தப்பிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''அவர்கள் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளை வீணாக்கி விடுகின்றனர். உலக விஷயங்களில் கொஞ்சம் இழப்பு ஏற்பட்டிருப்பதைப் பார்த்து மார்க்கத்தின் பகுதியை கை விட்டு விடுகின்றனர். அவர்கள் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளை வீணாக்கி விடுகின்றனர். வழக்குகளிலும், அவர்களின் பங்காளிகளாக இருப்பவர்களுடன் ஏற்படும் பிரச்சனைகளின் போது அவர்கள் மார்க்கத்தைக் கைவிட்டு விடுகின்றனர்.'' அப்போது மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்குப் பதிலாக உலகத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றனர். மார்க்கத்தை கை விட வேண்டியது வந்தாலும் அதன் மூலம் உலக இழப்புகளிலிருந்து தப்பிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் ''அவர்கள் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளை வீணாக்கி விடுகின்றனர். உலக விஷயங்களில் கொஞ்சம் இழப்பு ஏற்பட்டிருப்பதைப் பார்த்து மார்க்கத்தின் பகுதியை கைவிட்டு விடுகின்றனர். அவர்கள் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளை வீணாக்கி விடுகின்றனர். வழக்குகளிலும் அவர்களின் பங்காளிகளாக இருப்பவர்களுடனும் ஏற்படும் பிரச்சனைகளின் போது அவர்கள் மார்க்கத்தைக் கைவிட்டு விடுகின்றனர்.'' அதாவது, உறவினர் –களுக்கிடையே சொத்துப் பங்கீட்டின்போது பிரச்சனைகள் உருவாகின்றன. இந்த நிலையை இன்னும் நாம் பார்க்கின்றோம். ''பேராசையின் எண்ணத்திலேயே ஒருவர் மற்றவருடன் நடந்து கொள்ளும் விதம் இருக்கின்றது. மன இச்சைகளுக்கு எதிரில் அவர் மிகவும் பலவீனமானவராக இருக்கின்றார். இறைவன் அவரை பலவீனமானவராக வைத்திருக்கின்ற அந்த நேரம் வரை அவர் பாவம் செய்வதற்குத் துணிவதில்லை. ஆனால், பலவீனம் சிறிது அகன்று பாவம் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்போது உடனடியாக அதைச் செய்து விடுகின்றார்.''

நன்மை அவர்களிடம் மிகைத்திருப்பதன் காரணமாக அவர்கள் பாவங்களிலிருந்து தவிர்ந்திருக்கவில்லை. மாறாக, பாவம் செய்வதற்கான துணிவு அவர்களிடம் இருக்கவில்லை. அச்சம் அவர்களைப் பாவம் செய்வதிலிருந்து விலக்கி வைத்துள்ளது. அந்த அச்சம் அகன்ற பிறகு மீண்டும் அவர்கள் பாவம் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இன்று இந்தக் காலத்தில் எல்லா இடங்களிலும் தேடிப் பாருங்கள். அப்போது உண்மையான தக்வா சென்று விட்டது என்பது தெரிய வரும். உண்மையான ஈமான் முற்றிலும் இல்லாமல் ஆகி விட்டது. இவர்களிடம் இருக்கின்ற உண்மையான தக்வா மற்றும் ஈமானின் விதை ஒருபோதும் வீணாகி விடக் கூடாது என்று இறைவன் நாடியிருந்தால், மேலும் இப்போது விளைச்சல் முற்றிலும் அழிந்து விடப் போகின்றது என்பதை அவன் பார்க்கின்ற போது, மேலும் விளைச்சலை அவன் உருவாக்கி விடுகின்றான். அதே புத்தம்புதிய குர்ஆன் இப்போதும் இருக்கின்றது. அல்லாஹ் இதைப் பற்றி إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ *இன்னா நஹ்னு நஸ்ஸல்னத் திக்ர வ இன்னா லாஹூ ல ஹாஃபிளூன்* – நாமே இந்தக் குர்ஆனை இறக்கினோம். நாமே இதனை பாதுகாப்போம் (15:10) என்று கூறியுள்ளான். நபிமொழிகளின் பல தொகுதிகளும் இருக்கின்றன. ஏனைய பல அருள்களும் இருக்கின்றன. ஆனால், உள்ளங்களில் ஈமானும் செயலளவிலுள்ள நிலைமையும் முற்றிலும் இல்லாமல் ஆகி விட்டது.'' முஸ்லிம்களின் நிலை இவ்வாறு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. அந்தக் காலத்திலும் இன்றும் இதே நிலைதான் இருந்து வருகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இந்த விஷயங்கள் மீண்டும் உருவாக வேண்டும் என்பதற்காகவே இறைவன் என்னை அனுப்பியுள்ளான். மைதானம் காலியாக இருப்பதை அந்த இறைவன் பார்த்தான். அப்போது அவனது இறைத் தன்மையானது இந்த மைதானம் காலியாக இருக்க வேண்டும் என்பதை ஒருபோதும் விரும்பவில்லை.'' மக்களது உள்ளங்கள் நன்மை மற்றும் தக்வாவிலிருந்து காலியாக ஆகி விட்டதால் மனிதர்களின் மீதுள்ள கருணை உணர்வின் காரணமாக அதை கண் முன் நிறுத்தியவாறு இந்த மைதானம் காலியாக இருக்க வேண்டும் என்பதை இறைத் தன்மையானது விரும்பவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''மக்கள் இவற்றை விட்டும் விலகி தொலைவிலேயே இருக்கின்றனர். எனவே தான், அவர்களுக்கு எதிரில் இறைவன் உயிருள்ளவர்களின் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க விரும்புகின்றான். எனவே தான், தக்வாவின் வாழ்க்கையைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்பது நமது தப்லீகாக இருக்கின்றது.''

(மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 395-396; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நாம் ஆய்வு செய்து பார்த்தால் இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் போதனை செய்த அந்தக் காலத்திலுள்ள மக்களின் நிலையை மட்டும் படம் பிடித்துக் காட்டவில்லை. மாறாக, இன்றும் கூட நமக்கு இந்த

விஷயங்கள் தான் தென்படுகின்றன. நம்மில் எத்தனை பேர் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்படக் கூடியவர்களாக இருக்கின்றோம்? மற்றவர்களை விட்டு விடுங்கள். அவர்களிடம் பைஅத் செய்திருப்பதாக வாதம் செய்கின்ற நாம் இந்தக் கட்டளைகளுக்கேற்ப எந்த அளவு செயல்படக் கூடியவர்களாக இருக்கின்றோம்? என்பதை ஆய்வு செய்து பார்ப்பது அவசியமானதாகும். நான் ஜின்களையும் மனிதர்களையும் இறை வணக்கம் செய்வதற்காகவே படைத்துள்ளேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். என்ன? நாம் நமது உலகப் பணிகளை இறைவனை வணங்குவதற்காக தியாகம் செய்கின்றோமா? அல்லது அதற்கு நேர் மாறாக செயல்படுகின்றோமா? அல்லது நமது இறை வணக்கம் உலகப் பணிகளுக்காக தியாகம் செய்யப்படுகின்றதா? குறித்த நேரத்தில் தொழக் கூடியவர்களாக இருந்தாலும் கழுத்திலிருந்து சுமையை இறக்கி வைக்க முயற்சி செய்கின்ற மக்களும் இருக்கின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாதவர்களின் நிலை வேறுபட்டதாகும். நம்மிலும் அப்படிப்பட்டவர்கள் இருக்கின்றனர். மக்களோடு தொடர்புடைய விவகாரங்களில் நன்மையைக் கடைபிடியுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆனால், பலரும் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், பிறருக்கு நன்மை செய்வது ஒருபுறமிருக்கட்டும். மற்றவர்களின் உரிமையைப் பறிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர். பிறகு இப்படிப்பட்டவர்களும் இருக்கின்றனர். அவர்கள் உலக விஷயங்களில் ஏற்படும் இழப்புகளை சகித்துக் கொள்வதில்லை. மார்க்கத்திற்கு இழப்பு ஏற்படும் போது அதை சகித்துக் கொள்கின்றனர். நம்மில் எத்தனை பேர் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர்? சிறு சிறு விஷயங்களில் அவர்கள் ஆத்திரமடைகின்றனர். மற்றவர்கள் இவ்வாறு செய்தால் அவர்கள் அறிவீனர்களாக இருக்கின்றனர் என்று நம்மால் கூற முடியும். ஆனால், நம்மவர்களில் எவராவது அவ்வாறு செய்தால் இது மிகவும் வேதனைப்பட வேண்டிய விஷயமாகும். எனவே, ஒவ்வொருவரும் இவ்விஷயங்களில் தம்மைத் தாமே ஆய்வு செய்து பார்க்க முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த சொற்களை நாம் எப்போதும் நம் கண் முன்னால் வைத்திருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "அல்லாஹ் உயிருள்ளவர்களின் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க விரும்புகின்றான்."

இந்த உயிருள்ளவர்களைச் சார்ந்தவர்களாக இருப்பதற்காகத்தான் நாம் பைஅத் செய்துள்ளோம். எனவே, இதற்கான உரிமையைச் செலுத்துவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்ற விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் நாம் உயிருள்ளவர்களின் சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக ஆக வேண்டும். நேர்வழி மற்றும் முயற்சி செய்வது ஆகியவை தக்வாவையே சார்ந்திருக்கின்றது. எதுவரை தக்வா உருவாகாதோ எதுவரை மனிதன் முயற்சி செய்யாமல் இருப்பானோ, தன்னை துன்பத்தில் ஆழ்த்தியவாறு மார்க்கத்திற்காக எல்லா விதமான தியாகங்களைச் செய்வதற்கும் தயாராக இருக்க மாட்டானோ அதுவரை அவன் உண்மையான நேர்வழியைப் பெற முடியாது.

இதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: "எவர் முழுக்க முழுக்க அல்லாஹ்விற்கு அஞ்சியவாறு அவனது வழியைத் தேடுவதற்கு முயற்சி செய்வாரோ, இந்த விஷயம் திறந்து தரப்படுவதற்காக துஆ செய்வாரோ அப்படிப்பட்டவருக்கு அல்லாஹ் தனது சட்டமான وَالَّذِينَ جَاهَدُوا فِينَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا எவர் நம்மவராக ஆக முயற்சி செய்கின்றாரோ அவருக்கு நமது வழிகளை நாம் காட்டுகின்றோம் என்பதற்கேற்ப அவனே அவரது கையைப் பிடித்து அவருக்கு வழியைக் காட்டுகின்றான்." (29:70)

அல்லாஹ்வின் வழியைத் தேடுவதற்காக எவர்கள் முயற்சி செய்து அவர்களது தீமைகள் அகல வேண்டும் என்று துஆவும் செய்கின்றனரோ அல்லாஹ் அவர்களுக்கு தனது வழியைக் காட்டுகின்றான். நான் இப்போது ஓதிய வசனத்தில் அல்லாஹ் அதைப் பற்றி கூறியுள்ளான். அதாவது, நீங்கள் அல்லாஹ்வின் வழியில் முயற்சி செய்தால் பிறகு அல்லாஹ் தனது வழியை உங்களுக்கு காட்டுவான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "இந்த வசனத்தில் கூறி இருப்பதற்கேற்ப அவனே அவர்களின் கையைப் பிடித்து வழியைக் காட்டுகின்றான். அவரது உள்ளத்திற்கு நிம்மதியை வழங்குகின்றான். ஆனால், சுயமே உள்ளம் இருள் நிறைந்ததாகவும் நாவால் துஆ செய்வது சுமையாகவும் இருந்தால், ஷிர்க்கான பித்அத்தான கொள்கையை உடையவராக அவர் இருந்தால் அந்த துஆவினால் என்ன ஏற்படப் போகிறது?"

அதாவது அவரே இருள்களில் மூழ்கியுள்ளார். வெளிப்படையாக நாவால் துஆ செய்கின்றார். ஆனால், மிகவும் கஷ்டப்பட்டு அவரது நாவிலிருந்து துஆவிற்கான சொற்கள் வெளி வருகின்றன. கொள்கையைப் பொறுத்த வரையில் வெளிப்படையாகப் பார்க்கும்போது நாங்கள் முஸ்லிம்களாக இருக்கின்றோம் என்பதுதான் அவர்களின் கொள்கையாக இருக்கின்றது. நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம் அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ்விற்கு வேறு எவரையும் இணையாக நாங்கள் வைப்பதில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். கொள்கை அளவில் இவை அனைத்தும் சரியானதுதான். ஆனால், செயலளவில் அவர்கள் இணை வைக்கின்றனர். பித்அத் அதாவது மார்க்கத்தில் புதிய புதிய விஷயங்களைப் புகுத்துவதில் அவர்கள் ஈடுபடுகின்றனர். அத்தகைய நிலைமை இருந்தால் பிறகு துஆ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 'நல் விளைவுகள் ஏற்படாமல் இருக்கின்ற வேண்டுதல்கள் எப்படிப்பட்டவை?' என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அதாவது அவர்கள் செய்கின்ற அத்தகைய வேண்டுதல்களினால் நல்ல விளைவுகள் ஏற்படாது. எனவே, அத்தகைய நிலைமை இருந்தால் அந்த வேண்டுதல்கள் வேண்டுதல்களாக இருக்காது. அது உள்ளத்திலிருந்து வெளி வந்த துஆவாக இருக்காது. அது அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காகவும் அவனது கட்டளைகளுக்கேற்ப நடப்பதற்கும் உள்ள முயற்சியாகவும் துஆவாகவும் இருக்காது. ஏனென்றால், அதன் மூலம் நல்ல விளைவுகள் ஏற்படாது. இது மிகவும் தெளிவான விஷயமாகும். நல்ல விளைவுகள் வெளிப்படைவில்லையென்றால் நம்மிடம் தான் ஏதோ பலவீனம் இருக்கின்றது. நமது துஆவில் குறை இருக்கின்றது. நமக்கு துஆ செய்வதற்கான வழிமுறைகள் தெரியவில்லை. நாம் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடப்பவர்களாக இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "எதுவரை மனிதன் தூய உள்ளத்துடனும் உண்மையுடனும் எல்லா வகையான ஆகாத செயல்களின் கதவுகளையும் அடைத்து விட்டு இறைவனின் முன்னால் மட்டும் கை ஏந்தாமல் இருப்பாரோ அதுவரை அல்லாஹ்வின் உதவி மற்றும் ஆதரவைப் பெறுவதற்குத் தகுதியற்றவராக அவர் இருக்கின்றார். ஆனால், எப்போது அவர் அல்லாஹ்வின் கதவுகளின் முன்பு விழுவாரோ, மேலும் அவனிடமே துஆ கேட்பாரோ அப்போது அவரது இந்த நிலைமையானது இறைவனின் உதவியையும் கருணையையும் ஈர்க்கக் கூடியதாக இருக்கின்றது."

அத்தகைய நிலைமை உருவாகி சுயநலமின்றி சுய நோக்கங்களுக்காக அல்லாமல் மனிதன் அல்லாஹ்வின் முன்பு விழுந்து விட்டால், அவனிடம் துஆ கேட்டால் பிறகு இந்த நிலைமையானது அல்லாஹ்வின் உதவியையும் கருணையையும் ஈர்க்கக் கூடியதாக இருக்கின்றது. மனிதன் அவற்றைப் பெற்றுக் கொள்கின்றான். அது இறைவனின் கருணையைப் பெறுவதற்குக் காரணமாக இருக்கின்றது. அதன் மூலம் மனிதன் அல்லாஹ்வின் அருள்களைப் பெறுபவனாக ஆகி விடுகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "அல்லாஹ் வானத்திலிருந்து மனிதர்களின் உள்ளங்களின் மூலையை எட்டிப் பார்க்கிறான்." அல்லாஹ் கவனமற்றவனாக இருக்கின்றான் என்று கருதாதீர்கள். அல்லாஹ் வானத்தில் அமர்ந்தவாறு மனிதனின் உள்ளத்தின் மூலையில் இருப்பதைக் கூட தெரிந்து வைத்துள்ளான். "அந்த உள்ளத்தின் ஏதாவதொரு மூலையில் இருள், ஷிர்க் மற்றும் பித்அத்தின் எவ்வகையிலான பங்கு இருந்தாலும் கூட அல்லாஹ் அவனது துஆக்களையும் இறை வணக்கங்களையும் அவரது முகத்தில் எறிந்து விழுகின்றான்."

எனவே, உள்ளத்தை எல்லா வகையிலும் தூய்மையாக வைத்திருக்க முயற்சி செய்ய வேண்டும். உள்ளத்தின் எந்தப் பகுதியிலும் இருள் இருக்கக் கூடாது. எங்கும் எவ்வகையிலான இணை வைத்தலின் அம்சமும் இருக்கக் கூடாது. எங்குமே எவ்வகையிலான பித்அத்தான எண்ணங்களும் உள்ளங்களில் உருவாகி விடக் கூடாது. அவ்வாறு இருந்தால் இறை வணக்கங்கள் இறை வணக்கங்களாக இருக்காது. அல்லாஹ் அவற்றை ஏற்றுக் கொள்ள மாட்டான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "அல்லாஹ் அவற்றை அவரது முகத்தில் எறிந்து விடுகின்றான். அவரது உள்ளம் எல்லா வகையான சுய நோக்கங்களிலிருந்தும் தூயதாக இருப்பதை அவன் காண்கின்றபோது அவன் தனது கருணையின் கதவுகளை அவர்களுக்காக திறக்கின்றான். அவரை தனது நிழலின் கீழ் கொண்டு வந்து அவரை வளர்க்கின்ற பொறுப்பை சுயமே அவனே ஏற்றுக் கொள்கின்றான். உள்ளம் தூய்மை அடைந்து அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக மனிதன் இவற்றையெல்லாம் செய்யும்போது பிறகு அல்லாஹ் அவனை எல்லா வகையிலும் வளர்த்து அவனது தேவைகளை நிறைவேற்றுவதற்க தாமே பொறுப்பேற்றுக் கொள்கின்றான்."

(மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 396-397; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, ஓர் உண்மையான அஹ்மதி தமது உள்ளத்தை எல்லா வகையான ஷிர்க்கிலிருந்தும் பித்அத்திலிருந்தும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். எவர்கள் நாங்கள் அதிகமாக துஆ செய்தோம். நீண்ட துஆக்களைச் செய்தோம். ஆனால், அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று கூறுகின்றனரோ அவர்கள் தமது உள்ளங்களை அலசிப் பார்க்க வேண்டும். எங்காவது ஏதாவது மறைவான ஷிர்க் நம்மிடம் இருக்கின்றதா? ஏதாவதொரு வகையிலுள்ள பித்அத்தான காரியங்களில் அவர்கள் ஈடுபட்டுள்ளனரா? அல்லது அல்லாஹ் தடுத்த ஏதாவதொரு விஷயத்தை அவர்கள் செய்கின்றாரா? என்று அவர்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

தக்வாவை நிலைநாட்டுவதுதான் தமது ஜமாஅத் நிறுவப்பட்டதன் நோக்கமாகும் என்பதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட

மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''இந்த இயக்கத்தின் மூலமாக இறைவன் இதைத்தான் நாடியுள்ளான். அதனை அவன் எனக்கு வெளிப்படுத்தியுள்ளான். அதாவது தக்வா குறைந்து விட்டது.'' இந்த இயக்கத்தை நிறுவியதன் நோக்கமும் தக்வாவை நிலைநாட்டுவதாகும். இந்த விஷயத்தை ஒவ்வொருவரும் தமது மூளையில் பதிய வைக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''சிலர் வெளிப்படையாக வெட்கங் கெட்ட செயல்களில் ஈடுபடுகின்றனர். தீய வாழ்க்கைய நடத்துகின்றனர். ஆனால், சிலர் தமது செயல்களில் ஒரு விதமான அசுத்தத்தை கலந்துள்ளனர். ஆனால், நல்ல உணவில் சிறிதளவு விஷம் விழுந்து விட்டாலும் முழுவதும் விஷமாக ஆகி விடும் என்பது அவர்களுக்கு தெரியாது.'' நம்மில் சிலர் நன்மைகளைச் செய்கின்றனர். ஆனால், அவர்கள் சில தீய செயல்களில் ஈடுபடுகின்றனர் அவை நமது நன்மைகளைத் தின்று கொண்டிருக்கின்றன. நல்ல உணவு மற்றும் நல்ல பொருளில் கொஞ்சம் விஷம் விழுந்து விட்டாலும் அது முழு உணவையும் விஷம் நிறைந்ததாக ஆக்கி விடுகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''சிலர் மிக நுண்ணிய கிளைகளை உடைய வெளிவேஷம் போன்ற சிறு சிறு பாவங்களில் ஈடுபட்டு விடுகின்றனர். இப்போது இறைவன் உலகிற்கு தக்வா மற்றும் தூய வாழ்க்கையின் முன்மாதிரியை நிலைநாட்ட நாடியுள்ளான். இந்த நோக்கத்திற்காகவே அவன் இந்த இயக்கத்தை நிறுவியுள்ளான். அவன் தூய்மையை விரும்புகின்றான். ஒரு தூய ஜமாஅத்தை உருவாக்குவது அவனது நோக்கமாகும். தக்வா மற்றும் தூய்மையின் முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 96-97; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நமது நிலைமைகள் இவ்வாறுதான் இருக்கின்றதா? நாமும் தக்வா மற்றும் தூய்மையின் முன்மாதிரியாக ஆக முடியுமா? மற்றவர்கள் நம்மிடமிருந்து பாடம் படிப்பார்களா? என்று நாம் நமது நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தை எவ்வாறு பார்க்க விரும்புகின்றார்கள் என்பதைப் பற்றி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''இந்த இயக்கத்தை அல்லாஹ் தனது கைகளாலேயே நிறுவியுள்ளான். இதிலும் கூட பல மக்கள் இணைவதையும் அவர்கள் சுய நோக்கங்களை உடையவர்களாக இருப்பதையும் நாம் பார்க்கின்றோம்.''

தக்வாவின்படி நடப்பவர்களை உருவாக்குவதற்காகவே அல்லாஹ் இந்த இயக்கத்தை தமது கைகளால் நிறுவியுள்ளான். தமது நஃப்ஸின் சீர்திருத்தத்தை ஏற்படுத்தக் கூடியவர்களின் ஜமாஅத்தை நிலைநாட்டவே அவன் விரும்புகின்றான். ஆனால், இவ்வாறிருந்தும், தமது சுய நோக்கங்களைக் கொண்ட மக்களும் இந்த ஜமாஅத்தில் இணைகின்றனர். நன்மையையும் தகவாவையும் பெறுவது அவர்களின் நோக்கமாக இருப்பதில்லை. மாறாக, சுய பலன்களைப் பெறுவது அவர்களது நோக்கமாக இருக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''அவர்களது நோக்கம் நிறைவேறி விட்டால் நல்லது. அவ்வாறு நிறைவேறாமல் போனால் அவர்களது மார்க்கமும் இருக்காது. ஈமானும் இருக்காது.'' மார்க்கத்தை விட்டு விட்டு அவர்கள் சென்று விட்டால் ஈமான் அவர்களிடம் இருக்காது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: '' ஆனால், அதற்கு எதிரில் நபித்தோழர்களின் வாழ்க்கையைப் பார்க்கும் போது அவர்களில் ஒருவரிடம் கூட இதுபோன்ற சம்பவம் நிகழவில்லை அவர்கள் ஒருபோதும் இவ்வாறு செய்யவில்லை. நமது பைஅத் தவ்பாவின் பைஅத்தாகும்.'' ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் நாம் செய்துள்ள பைஅத் தவ்பாவின் பைஅத்தாகும். தமது பாவங்களுக்காக தவ்பா செய்தவாறு எதிர்காலத்தில் நன்மைகள் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைப்பதற்காக இறைவனிடம் துஆ செய்கின்றோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஆனால், அந்த மக்களின் பைஅத் (அதாவது நபித்தோழர்களின் பைஅத்) தமது தலையை கொடுக்கின்ற பைஅத்தாகும்.'' அந்தக் காலத்தில் வாளாலான ஜிஹாது இருந்தது. எனவே, அவர்கள் தமது தலையைக் கொடுக்கின்ற பைஅத்தை செய்திருந்தனர். அதற்காக அவர்களில் ஒவ்வொருவரும் எப்போதும் தயாராக இருந்தனர். ஒருபுறம் அவர்கள் பைஅத் செய்தனர். மறுபுறம் அவர்கள் தமது எல்லா செல்வங்களையும், பொருட்களையும், கண்ணியத்தையும், மரியாதையையும், உயிரையும், பொருளையும் விட்டு விலகி விட்டனர். எல்லாவற்றையும் அவர்கள் விட்டு விட்டனர். எந்தப் பொருளுக்கும் சொந்தக்காரர்களாக அவர்கள் இருக்கவில்லை. இவ்வாறே அவர்களது எல்லா எதிர்பார்ப்புகளும் உலகத்தை விட்டு துண்டிக்கப்பட்டு விட்டது. எல்லா வகையான மதிப்பையும், மரியாதையையும், செல்வத்தையும், சொத்தையும் பெற வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் அழிந்து போய் விட்டது.'' அவர்களுக்கென்று எதுவுமே இருக்கவில்லை. அவர்கள் தமது சுய கண்ணியத்தைப் பொருட்படுத்தவில்லை. அவர்களுக்கு பெரும் மகத்துவம் கிடைக்க வேண்டும் என்ற விருப்பமும் இருந்ததில்லை. எந்தவொரு பெரிய பதவி கிடைக்க வேண்டும் என்ற விருப்பமும் அவர்களுக்கு இருக்கவில்லை. நாம் இஸ்லாத்திற்காக நமது உயிர், பொருள், நேரம், கண்ணியம் ஆகியவற்றை தியாகம் செய்ய எல்லா நேரமும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே அவர்களுக்கு இருந்தது. இந்த உறுதிமொழியை இன்றும் நாம் எடுக்கின்றோம். ஆனால், சிலர் இவ்வாறும் இருக்கின்றனர். பொறுப்பாளர்களிலும் சிலர் இவ்வாறு இருக்கின்றனர். அவர்கள் பதவி கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அந்த ஆசை ஓர் எல்லைக்குட்பட்டதாக இருந்தாலும் ஏதாவது கண்ணியத்தை மகத்துவத்தைப் பெற வேண்டும் என்பதை அவர்கள் வெளிப்படுத்தி விடுகின்றனர். பொறுப்புகள் அவர்களுக்கு கிடைத்தால் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதற்கு பகரமாக, முன்பை விட அதிகமாக மார்க்கத்திற்குத் தொண்டு செய்யக் கூடிய உணர்வு அவர்களிடம் உருவாவதற்குப் பகரமாக அதன் பக்கம் அவர்கள் கவனம் செலுத்தாமல் இருக்கின்றனர். பொறுப்பு பற்றிய பெருமை மட்டுமே உள்ளது. எனவே, பொறுப்பாளர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

''அவர்களில் (நபித்தோழர்களில்) எவருக்கு தான் நாம் அரசர்களாக ஆக வேண்டும் அல்லது ஒரு நாட்டை நாம் வென்று விட வேண்டும் என்ற எண்ணம் இருந்தது? ஏனென்றால், அப்போதிருந்த நிலையில் நபித்தோழர்களில் எவருக்காவது இந்த எண்ணம் வந்திருக்க முடியுமா?'' இந்த விஷயங்கள் அவர்களது யூகங்களிலும், எண்ணங்களிலும் கூட இருக்கவில்லை. மாறாக, அவர்கள் எல்லா வகையான எதிர்பார்ப்புகளை விட்டும் விலகி ஆயத்தமாக இருந்தனர்.''

அவர்கள் சொத்தையும் சுகத்தையும் விரும்பவில்லை. பதவிகள் கிடைக்க வேண்டும் என்று விரும்பவில்லை. மகத்துவத்தையும், கண்ணியத்தையும் அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் தியாகம் செய்யவே விரும்பினர். அதில்தான் அவர்களுக்கு இன்பம் கிடைத்தது. அதில்தான் அவர்களுக்கு சுவை இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''எதுவரையென்றால் அவர்கள் தமது உயிரைத் தருவதற்குத் தயாராக இருந்தனர். அவர்களது நிலைமை எவ்வாறிருந்தது என்றால் அவர்கள் உலகை விட்டு முற்றிலும் தனியாகவும் அதிலிருந்து துண்டிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். ஆனால், அல்லாஹ் அவர்கள் மீது அருள் செய்து அவர்களுக்கு வழங்கினான் என்பது வேறு விஷயமாகும்.'' அவர்கள் எல்லா விதமான தியாகங்களைச் செய்யவும் தயாராக இருந்தனர். ஆனால், அல்லாஹ் அவர்களுக்கு தனது அருளை வழங்கினான். ''தனது அருளால் அவர்களுக்கு எந்த அளவு வழங்கினான் என்றால் எவர்கள் அவனது வழியில் தங்களிடமிருந்த எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டனரோ அவர்களை ஆயிரம் மடங்காகப் பெருகும்படி செய்து விட்டான்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 397-398; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு, மிகவும் வேதனையுடன் நாம் நல்லொழுக்கங்களிலும், நன்மைகளிலும் நிலைத்திருக்க வேண்டும்; பாவங்களை விட்டு விட வேண்டும் என்பதன் பக்கம் நமக்கு கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''எந்த நபர் தமது அண்டை வீட்டுக்காரருக்கு தமது ஒழுக்கத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காட்டுகின்றாரோ அவர் முதலில் எவ்வாறு இருந்தார்? இப்போது எந்த அளவு மாறி விட்டார் என்பதைக் காட்டுகின்றாரோ அவர் ஓர் அற்புதத்தை காட்டுகின்றார். நாம் அஹ்மதியான பிறகு நமது அண்டை வீட்டுக்காரருக்கு நம்மிடத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பது தென்படுகின்றதென்றால் இந்த மனிதன் மற்ற சாதாரண மனிதர்களைப் போன்றவன் அல்ல என்று பக்கத்து வீட்டுக்காரர் வியப்புடன் பார்க்கும் அளவுக்கு ஒவ்வோர் அஹ்மதியும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டால், ஒரு வகையில் அவர் ஓர் அற்புதத்தைக் காட்டுகின்றார். அவர் எத்தகைய பணிகளைச் செய்வார் என்றால் அதைப் பார்த்து மக்கள் வியப்படைவர்.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இதன் தாக்கம் அண்டை வீட்டுக்காரர் மீது மிகவும் உயர்ந்த நிலையில் ஏற்படும்.'' இந்த உயர்வான நல்லொழுக்கத்தின் விளைவாகவே அண்டை வீட்டுக்காரருக்கு நல்ல தாக்கம் ஏற்படுகின்றது. மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள தாக்கம் ஏற்படுகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நமது ஜமாஅத்தின் மீது அவர்களுக்கு என்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது? என்று ஆட்சேபனை செய்யப்படுகின்றது. அவர்கள் இட்டுக்கட்டி பொய் கூறுவதிலும் கோபத்திலும் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் அவதூறு கூறப்படுகின்றது.'' அதாவது, எதிரிகள் இவ்வாறு ஜமாஅத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றனர் என்று அவர்கள் கூறுகின்றார்கள். அஹ்மதியாக ஆனதால் என்ன முன்னேற்றம் கிடைத்திருக்கின்றது? என்று கேட்கின்றனர். இந்த மக்கள் பொய் கூறுவது, தவறான எண்ணம் கொள்வது, கோபப்படுவது, இட்டுக்கட்டிப் பொய் கூறுவது ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர் என்று அவர்கள்

நம்மீது குற்றச்சாட்டுகளைக் கூறுகின்றனர். ''மனிதன் மிகச் சிறந்த இயக்கம் என்று கருதியே இந்த இயக்கத்தில் இணைந்தான். அவர்களுக்கு (அஹ்மதிகளுக்கு) இவ்விஷயங்கள் அவர்களின் வெட்கத்திற்குக் காரணமாக இருக்கவில்லையா?'' அஹ்மதிகளுக்கு இவை வெட்கப்பட வேண்டிய விஷயங்களாகும். நல்ல இயக்கம் என்று கருதியே அவர்கள் ஜமாஅத்தில் இணைகின்றார் அல்லது அவர்களைப் பார்த்து, அவர்கள் நல்லவர்கள் என்று கருதி ஜமாஅத்தில் இணைகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஒரு நல்ல மகன் எவ்வாறு தனது தந்தையின் நல்ல பெயரை வெளிப்படுத்து –கின்றாரோ அவ்வாறே பைஅத் செய்பவரும் அந்த மகனைப் போன்றே இருக்கின்றார்.'' கண்ணியமாக நடந்து கொள்கின்ற கட்டுப்பட்டு நடக்கின்ற நல்ல மகன் தனது தந்தையின் நற்பெயருக்குக் காரணமாக ஆகி விடுகின்றார். ஏனென்றால், பைஅத் செய்பவரும் அந்த மகனைப் போன்றே இருக்கின்றார். இதனால்தான் இதற்கு ஆதாரமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய துணைவியர்களைக் குறித்து அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களின் தாய்மார்கள் ஆவர் என்று கூறப்பட்டிருக்கின்றது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''அவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களுக்குத் தந்தையாக இருக்கின்றார்கள்.'' பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவிமார்கள் நம்பிக்கை கொண்டவர்களின் தாயாக இருப்பதால், பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களின் தந்தையாக இருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''பௌதீகத் தந்தை ஒருவரை பூமியில் கொண்டு வருவதற்குக் காரணமாக இருக்கின்றார்.'' அதாவது, பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பூமியில் வருவதற்குக் காரணமாக இருக்கின்றனர். பிறப்பின் மூலமாக ஒரு குழந்தை இந்த உலகத்திற்கு வருகின்றது. பெற்றோர்களின் மூலமாக அக்குழந்தைகளுக்கு இந்த வெளிப்படையான வாழ்க்கை கிடைக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஆனால், இதற்கு எதிரில் ஆன்மீகத் தந்தை அவனை வானத்திற்குக் கொண்டு செல்கின்றார். பௌதீகத் தந்தை மகனை பூமிக்குக் கொண்டு வருகின்றார். ஆன்மீகத் தந்தை அவனை வானத்திற்குக் கொண்டு செல்கின்றார்.'' அதாவது ஆன்மீகத்தில் அவர் முன்னேறும்படி செய்கின்றார். ''அந்த அசல் தலைமையகத்தின் பக்கம் அவனுக்கு வழிகாட்டுகின்றார்.'' அதாவது, இறைவனின் பக்கம் அவருக்கு வழிகாட்டுகின்றார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''மகன் தனது தந்தைக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதை நீங்கள் விரும்புவீர்களா?'' ஒருபோதும் ஒரு மகன் தனது தந்தைக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதை எவரும் விரும்ப மாட்டார். அவ்வாறே, ஒரு தந்தையும் தனது மகன் தனக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதை விரும்பமாட்டார். எனவே, ஏற்கனவே நான் கூறியதைப் போன்று உங்களது முன்மாதிரியை எவ்வாறு ஆக்கிக் கொள்ள வேண்டும் என்றால், அதனால் பிறருக்கு எவ்வித தடுமாற்றமும் ஏற்படக்கூடாது. அது உங்கள் தந்தைக்கு அவப்பெயர் ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்க கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''மகன் தனது தந்தைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் விபச்சாரிகளிடம் சென்றால், சூதாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால், மது அருந்தினால், இன்னும் இதுபோன்ற பிற தீமைகளில் ஈடுபட்டால் அதனை எந்தத் தந்தையும் விரும்ப மாட்டார். ஒரு முஸ்லிம் தந்தை தனது மகன் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதை ஒருபோதும் விரும்பமாட்டார்.'' இப்படிப்பட்ட சில செயல்களை முஸ்லிம் அல்லாதவர்கள் கூட விரும்புவதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''மது அருந்தி தந்தைக்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்ற அத்தகைய வெறுக்கத்தக்க செயல்களில் அவன் ஈடுபட்டால் எந்த மனிதனும் இத்தகைய செயல்களை விரும்ப மாட்டான் என்பது எனக்கு தெரியும். தகுதியற்ற மகன் அவ்வாறு செய்யும்போது மக்கள் அவனைப் பற்றி பேசுவதை யாரும் தடுக்க முடியாது.'' மக்கள் அவனது செயல்களைச் சுட்டிக் காட்டுவார்கள். அவனைப் பற்றியும் அவனது தந்தை பற்றியும் பேசுவார்கள். ''மக்கள் அவனை அவனது தந்தையுடன் தொடர்புபடுத்தி இவன் இந்த நபரின் மகனாவான் என்று கூறுவர். இன்னாரது மகன் இன்ன தீய செயலைச் செய்தான் என்று கூறுவர். அந்தத் தகுதியற்ற மகன் சுயமே தந்தையின் அவப்பெயருக்குக் காரணமாகி விடுகின்றான். இவ்வாறே ஒரு நபர் ஓர் இயக்கத்தில் இணையும் போது அவர் இந்த இயக்கத்தின் மகத்துவத்தையும் கண்ணியத்தையும் கருத்தில் கொள்ளாமல் இருந்தால் மேலும் அதற்கு எதிராக செயல்பட்டால் அவர் அல்லாஹ்வின் பிடியின் கீழ் வந்து விடுவார். ஏனேன்றால் அவர் தன்னை மட்டும் அழிவிற்கு ஆளாக்கிக் கொள்வதில்லை. மாறாக, மற்றவர்களுக்கு ஒரு தீய முன்மாதிரியாகத் திகழ்ந்து அவரை நற்பாக்கியமுள்ள மற்றும் நேரான வழியிலிருந்து விலக்கி வைக்கின்றார்.'' ஆரம்பத்தில் கூறிய விஷயத்தை அன்னார் இப்போது விளக்கமாகக் கூறி விட்டார்கள்.

''எனவே, எந்த அளவு உங்களுக்கு சக்தி இருக்கின்றதோ அந்த அளவு நீங்கள் இறைவனிடம் உதவி கேளுங்கள். உங்களது பலவீனத்தை அகற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். எங்கு நீங்கள் செயலிழந்து போவீர்களோ அங்கு உண்மையுடனும் உறுதியுடனும் கையை உயர்த்துங்கள். உண்மை மற்றும் உறுதியான ஆதரவுடனும் பணிவுடனும் உருக்கத்துடனும் உயர்த்தப்படுகின்ற கைகள் காலியாக திரும்ப அனுப்படுவதில்லை.''

முயற்சி செய்யுங்கள். நீங்கள் செய்த முயற்சியில் வெற்றி பெறவில்லையென்றால், இனி நம்மால் எதுவும் செய்ய முடியாது என்று கருதி விடாதீர்கள். துஆக்கள் செய்யுங்கள். மேலும் துஆக்கள் செய்யுங்கள். எந்த அளவு துஅக்கள் செய்ய வேண்டும் என்றால் அதற்கு ஓர் எல்லையே இருக்கக் கூடாது. உண்மையின் கையை உயர்த்தியவாறு இறைவனிடம் துஆ செய்ய வேண்டும். உண்மையுடன் தமது உள்ளத்தை அலசிப் பார்த்தவாறு இறைவனிடம் துஆ செய்ய வேண்டும். நான் கூறுவது உண்மை. இதைத்தான் நான் கூறுகின்றேன். இதையே நான் இறைவனிடம் கேட்கின்றேன். இவ்வாறு உண்மையின் தூண்டுதல் உள்ளத்தில் உருவாகி அதன் விளைவாக கை உயர்ந்தால், அதன் விளைவாக மனிதன் அல்லாஹ்வின் பக்கம் குனிந்தால் பிறகு அத்தகைய கைகள் காலியாக திரும்ப அனுப்பப்படுவதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இது உறுதியான விஷயமாகும். ஒரு நபர் தன்னிடம் தன் இனத்தைச் சார்ந்த மனித குலத்திற்காக அனுதாப உணர்வுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கா விட்டால் அவர் கருமியாவார்.'' தனது நண்பர்களுக்காகவும், மற்ற மனிதர்களுக்காவும் ஒருவரிடம் அனுதாப உணர்வு இல்லாமல் இருந்தால் அவர் கருமியாவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நன்மை இருக்கின்ற ஒரு வழியை நான் பார்க்கும்போது அதன் பக்கம் மக்களை மீண்டும் மீண்டும் குரல் கொடுத்து அழைப்பது எனது கடமையாகும்.'' நன்மையின் ஒரு வழியை நாம் கண்டதால்தான் நாம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டோம். எனவே, இவ்வழியின் பக்கம் மீண்டும் மீண்டும் குரல் கொடுத்து அழைப்பதும் இப்போது நமது கடமையாக இருக்கின்றது. இங்கு வந்து உங்கள் உலகத்தையும் மறுமையையும் சரிசெய்வதற்கான வழியைப் பாருங்கள் என்று அவர்களிடம் கூற வேண்டும். ''இதற்கேற்ப ஒருவர் செயல்படுகின்றரோ இல்லையா? என்பதைப் பற்றி கவலைபடக் கூடாது.'' அழைப்பது நமது பணியாகும். சீர்திருத்தத்தை ஏற்படுத்துவது நமது பணியாகும். எனவே இதற்கேற்ப ஒருவர் செயல்படுகின்றாரா? இல்லையா? என்று பார்க்க வேண்டாம்.

ஒரு ஃபார்ஸி சொற்றொடரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஒருவர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிக் கொண்டே இருப்பேன் அல்லது போதனை செய்து கொண்டே இருப்பேன்.''

எனவே, நமது நல்ல முன்மாதிரியை நிலைநாட்டியவாறு நாம் தப்லீகிற்கான உரிமையையும் செலுத்த வேண்டும். ஒவ்வோர் அஹ்மதியின் மீதும் இந்த பொறுப்பு இருக்கின்றது. இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். இறுதியில் ஒரு நேரம் வரும். அப்போது மக்கள் நாம் கூறுவதைக் கேட்பர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருந்தது போன்றே எவருமே கேட்காமல் இருந்தாலும் கூட நாம் தூதுச்செய்தியை எட்ட வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் கூறியிருப்பது போன்றே அவர்களது ஜமாஅத்துடன் நம்மை தொடர்புபடுத்தி நாம் கூறும்போது நமது முன்மாதிரியும் உயர்ந்த தரத்தில் இருக்க வேண்டும். பிறகு மக்களின் கவனம் நம் பக்கம் திரும்பும்.

பிறகு நமது நிலைமைகளை சிறப்பானதாக ஆக்குவதற்குப் போதனை செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது(அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''எனக்கு வந்த ஓர் இல்ஹாமில் اِلَّا الَّذِيْنَ عَلَوْا بِاسْتِكْبَارٍ என்ற சொற்கள் உள்ளன. இது பிளேக் நோய் தொடர்பான அரபியில் வந்த இல்ஹாமாகும். இந்தச் சொற்களுக்கு முன்னரும் அரபி சொற்கள் உள்ளன. அதாவது அந்த இல்ஹாமில் எவர் உனது வீட்டிற்குள் வந்து விடுவாரோ அவரை நான் காப்பாற்றி விடுவேன் என்ற சொற்களுடன் اِلَّا الَّذِيْنَ عَلَوْا بِاسْتِكْبَارٍ என்ற சொற்களும் இருக்கின்றன. அதாவது எந்த மக்கள் தம்மைத் தாமே உயர்ந்தவர்களாகக் கருதுகின்றனரோ அவர்களைத் தவிர என்ற சொற்கள் இருக்கின்றன. இதற்கு எவர்கள் முழுமையாகக் கட்டுப்படுவதில்லையோ என்று அன்னார் விளக்கமளித்துள்ளார்கள். அவர்களை ஏற்றுக் கொண்டவர்களே அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பர். முழுமையான முறையில் கட்டுப்படாதவர்களும் இதில் அடங்குவர்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இந்த விஷயம் எச்சரிக்கை வடிவிலானதும் அச்சுறுத்தக் கூடியதும் ஆகும். எங்கு உமது வீட்டிற்குள் வந்து விடுபவர்களை நான் பாதுகாப்பேன் என்று அல்லாஹ் உத்திரவாதம் வழங்கியுள்ளானோ அங்கு எவர் முழுமையான முறையில் கட்டுப்படாமல் இருக்கின்றாரோ அவருக்கு இதன் பலன் கிடைக்காது என்பதும் தெரிய வருகின்றது. அவர்கள் கண்டிப்பாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பது அல்லாஹ்வின் கடமையல்ல.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘எனவே, மீண்டும் மீண்டும் கிஷ்தி நூஹ் (நூஹின் கப்பல்) என்ற நூலைப் படிப்பது அவசியமானதாகும். மேலும் திருக்குர்ஆனை ஓதுங்கள். அதற்கேற்ப செயல்படுங்கள். என்ன நடக்க போகின்றது என்பதை பற்றி யாருக்கு என்ன தெரியும்? நீங்கள் உங்கள் சமுதாயத்திடமிருந்து பெற வேண்டிய சாபத்தைப் பெற்று விட்டீர்கள்.’’ ஆனால், இந்த சாபத்தைப் பெற்ற பிறகு இறைவனிடத்திலும் உங்கள் விவகாரம் தூய்மையாக இல்லாமல் இருந்தால், மேலும் அவனது கருணை மற்றும் அருளின்கீழ் வராமல் இருந்தால் பிறகு எந்த அளவு துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாக வேண்டியது வரும்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘பத்திரிகைக்காரர்கள் எந்த அளவு கூச்சலிடுகின்றனர்? நம்மை எதிர்ப்பதில் எல்லா வகையிலும் அவர்கள் வலுவாக செயல்படுகின்றனர்.’’

இன்றைய நாட்களில் எதிர்ப்பு இன்னும் அதிகமாகி விட்டது. இந்த எதிர்ப்பின் காரணமாகவே பாகிஸ்தானிலுள்ள நமது பல மக்களும் அங்கிருந்து ஐரோப்பாவிற்கு வருகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘ஆனால், அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இறைவனின் பணிகள் அருளுக்குரியவையாக இருக்கின்றன. எனினும், இந்த அருள்களிலிருந்து பங்கு பெறுவதற்கு நாம் நம்மிடம் சீர்திருத்தத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும். எனவே நீங்கள் உங்களது ஈமானையும் செயல்களையும் கணக்கிட்டு பாருங்கள். உங்களது உள்ளம் இறைவனின் அரியணையாக ஆகும் அளவிலுள்ள அத்தகைய தூய்மையையும் மாற்றத்தையும் நீங்கள் உங்களிடம் ஏற்படுத்தி விட்டீர்களா? அதன் மூலம் நீங்கள் அவனது பாதுகாப்பின் நிழலின் கீழ் வந்து விடவேண்டும்.’’

(மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 69-70, அடிக்குறிப்பு எண். 2 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, இதைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. புதிய அஹ்மதிகளானாலும் பழைய அஹ்மதிகளானாலும் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு எதுவரை நாம் நமது செயல் சீர்திருத்தத்தைச் செய்யாமல் இருப்போமோ அதுவரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததன் விளைவாக நமக்கு கிடைக்க விருக்கின்ற அந்த அருள்களிலிருந்து நாம் பலன் பெற முடியாது. அவ்வாறே இறைவனின் பாதுகாப்பின் நிழலின் கீழ் நம்மால் வரவும் முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘ஈமானைப் பெறுவதற்கு பணிவை மேற்கொள்ளும் நிலை விதையைப் போன்றதாகும். பிறகு வீணான விஷயங்களை விட்டு விடுவதன் மூலமாக ஈமான் தனது மென்மையான செடியை வெளிப்படுத்துகின்றது.’’ பணிவையும் உருக்கத்தையும் உருவாக்குவது ஈமானுக்கு விதையைப் போன்றதாகும். இந்த ஈமான் உருவாகி மனிதன் வீணான விஷயங்களைக் கைவிட்டு விட்டால் ஈமானில் மென்மையான செடி வெளியில் வர ஆரம்பிக்கின்றது. ‘‘செல்வத்தை ஸக்காத்தாக கொடுப்பதன் மூலம் ஈமான் என்ற மரத்தின் கிளைகள் வெளியில் வர ஆரம்பிக்கின்றன.’’ எவர்கள் பொருள் தியாகம் செய்கின்றனரோ, ஸக்காத் கொடுக்கின்றனரோ, இறை வழியில் செலவு செய்கின்றனரோ அவர்கள் இந்தச் செடியை மேலும் வளரச் செய்கின்றனர். பிறகு, அதிலிருந்து கிளைகள் வர ஆரம்பித்து விடுகின்றன. அவை ஓரளவிற்கு அதற்கு வலுவூட்டுகின்றது.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘மன இச்சைகளை எதிர்த்து நிற்பதன் மூலமாக இந்த கிளைகளில் நல்ல வலிமையும் உறுதியும் ஏற்பட்டு விடுகின்றது.’’ மனிதனின் உள்ளத்தில் தீய இச்சைகள் உருவாகும்போது தீமைகளின் பக்கம் கவனம் ஏற்படும்போது அதை மனிதன் எதிர்த்து நிற்கின்றான். அவற்றை அமுக்கி விடுகின்றான். அதை அவன் செய்வதில்லை. அந்த நிலைமை ஏற்பட்டால், அந்த தீமைகள் அமுங்கி விட்டால் பிறகு மரத்திலிருந்து வெளிப்பட்டுள்ள அந்த கிளைகளில் வலிமையும் உறுதியும் ஏற்பட்டு விடுகின்றது. ‘‘பிறகு தனது உடன்படிக்கைகளையும் தம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றையும் முழுமையாகப் பேணிப் பாதுகாக்கின்றபோது ஈமானின் அந்த மரம் தனது வலுவான தண்டின் மீது நின்று விடுகின்றது.’’

ஒவ்வொருவரும், நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்று உடன்படிக்கை செய்துள்ளனர். குத்தாமுல் அஹ்மதிய்யா, அன்ஸாருல்லா, லஜ்னா ஆகியோர் எடுக்கும் உறுதிமொழியில் இந்த உறுதிமொழியையும் நாம் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம். ஜமாஅத்தும் பைஅத் வாங்கும்போது இந்த உறுதிமொழியைக் கூற வைக்கின்றது. இந்த உடன்படிக்கைகளை நீங்கள் பாதுகாத்தால் மேலும் உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களையும் நீங்கள் பாதுகாக்க வேண்டும். பொறுப்பாளர்களிடம் பொறுப்புகள் நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. சாதாரண அஹ்மதியிடமும் நம்பி ஒப்படைக்கப்பட்டவை இருக்கின்றன. அவர் அஹ்மதிய்யத்தின் சரியான முன்மாதிரியாகத் திகழ வேண்டும். எவரது தடுமாற்றத்திற்கும் அவர் காரணமாக ஆகி விடக் கூடாது. அவ்வாறு இருந்தால் பிறகு ஈமானின் இந்த மரம் தனது வலுவான தண்டின் மீது நின்று விடும். இந்த எல்லா விஷயங்களும் ஒன்று சேர்ந்து அதை வலுவான மரமாக ஆக்கி விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘பிறகு அது கனித்தரக்கூடிய நேரம் வரும்போது அதற்கு இன்னொரு ஆற்றலின் அருள் கிடைக்கின்றது. அந்த ஆற்றல் கிடைப்பதற்கு முன்னதாக அந்த மரத்தில் பூ பூக்காது. அது கனியை தராது.’’

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5, ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 209 அடிக்குறிப்பு)

அதாவது, அந்த மரம் வலுவடைந்த பிறகு அல்லாஹ்வின் அருள் அதில் இறங்கி அதை கனி தரக்கூடிய மரமாக ஆக்குகின்றது. எனவே, நாம் நம்மிடம் பணிவை உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனென்றால், இதன் மூலமாகவே நாம் நமது நஃப்ஸை தியாகம் செய்வதற்குரிய உரிமையைச் செலுத்த முடியும். நமது ஈமானில் நாம் முன்னேற முடியும். வீணான விஷயங்கள் இன்றைய நாட்களில் நம்மை சூழ்ந்திருக்கின்றன. அது டி.வி மற்றும் இணையதளத்தின் வடிவில் ஒவ்வோர் வீட்டிலும் இருக்கின்றது. நமது ஈமானில் முன்னேறுவதற்கு அவற்றிலிருந்து தவிர்ந்திருப்பது அவசியமானதாகும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் அருளால் கனிகளையும் பூக்களையும் தரக்கூடிய கிளைகளாக ஆக முடியும். நம்முடைய மற்றும் நமது சந்ததிகளுடைய இவ்வுலகையும் மறுமையையும் சரி செய்பவர்களாக நாம் ஆக முடியும்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஜமாஅத்தின் சிறந்த ஒளிமயமான எதிர்காலம் பற்றி முன்னறிவிப்பு செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ‘‘இந்தக் காலமும் ஆன்மீகப் போருக்கான காலமாக இருக்கின்றது. ஷய்த்தானுடன் போர் ஆரம்பமாகி உள்ளது. ஷய்த்தான் தனது எல்லா ஆயுதங்களுடனும் சூழ்ச்சிகளுடனும் இஸ்லாமியக் கோட்டையின் மீது தாக்குதல் நடத்துகின்றான். அவன் இஸ்லாத்திற்கு தோல்வியைத் தர விரும்புகின்றான். ஆனால், இறைவன் இப்போது ஷய்த்தானுடன் நடக்கின்ற இந்த இறுதிப் போரில் நிரந்தரமாக அவனை தோல்வி அடையச் செய்வதற்காக இந்த இயக்கத்தை நிறுவியுள்ளான்.’’ எனவே, நமது நிலைமைகள் அவ்வாறானதாக இருக்கின்றதா? என்பதையும் ஷய்த்தானுடன் போர் செய்வதற்கு நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்கின்றோமா என்பதை நாம் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘யார் இந்த இயக்கத்தை அடையாளங்கண்டு கொள்கின்றாரோ அவர் அருளுக்குரியவர் ஆவார். நற்கூலியைப் பெறுவதற்கான காலம் குறைவாகவே இருக்கின்றது. விரைவில் அந்த நேரம் வரவிருக்கின்றது. அப்போது அல்லாஹ் இந்த இயக்கத்தின் உண்மையைச் சூரியனை விட அதிகமாக பிரகாசமானதாகக் காட்டுவான். அந்த சமயத்தில் நம்பிக்கை கொள்வது நற்கூலிக்குக் காரணமாக இருக்காது.’’ இந்த இயக்கத்தின் உண்மை சூரியனைப் போன்று பிரகாசிக்கின்ற அந்த சமயத்தில் மக்கள் நம்பிக்கை கொள்ளத்தான் செய்வர். ஆனால், அது நற்கூலிக்குக் காரணமாக இருக்காது. ‘‘தவ்பாவின் கதவுகளும் அடைக்கப்பட்டு விட்டதுபோன்றே இருக்கும்.’’ அதாவது, அப்போது தவ்பா என்று சொல்லப் –பட்டாலும் இன்று உள்ள அளவுகோலுக்கேற்ப அது ஏற்றுக் கொள்ளப்படுவது போன்று அன்று அது இருக்காது. ஏனென்றால், உலகம் இன்று இந்த இயக்கத்தை ஒன்றுமற்றதாகக் கருதுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘என்னை ஏற்றுக் கொள்பவர்கள் வெளிப்படையாக தமது நஃஸுடன் ஒரு மகத்தான போர் புரிய வேண்டியது உள்ளது. சில நேரங்களில் அவருக்கு தனது சகோதரர்களை விட்டும் பிரிய வேண்டிய நிலை வருவதை அவர் பார்ப்பார். அவரது உலக வியாபாரங்களில் தடையை ஏற்படுத்த முயற்சி செய்யப்படும். அவருக்கு ஏச்சுப் பேச்சுகளைக் கேட்க வேண்டியது வரும்.’’ இன்றைய நாட்களில் பல நாடுகளில் குறிப்பாக முஸ்லிம் நாடுகளில் இவை நடக்கின்றன. ‘‘சாபமிடுவதை அவர் கேட்பார். ஆனால், இந்த எல்லா விஷயங்களுக்காகவும் இறைவனிடமிருந்து அவருக்கு நற்கூலி கிடைக்கும். ஆனால், பிறிதொரு நேரம் வரும்போது எந்த அளவு வேகமாக உலகத்தின் கவனம் இந்த இயக்கத்தின் பக்கம் திரும்புமென்றால் அது ஒரு உயரமான குன்றிலிருந்து தண்ணீர் விழுவதைப் போன்று இருக்கும். மறுப்பவர் எவருமே தென்படாத அந்த சமயத்தில் ஏற்றுக் கொள்வதன் தரம் எந்த அளவு உயர்வானதாக இருக்கும்? அப்போது ஏற்றுக் கொள்வது வீரமிக்க செயல் அல்ல. எப்போதும் துக்கத்தின் காலத்தில்தான் நற்கூலி கிடைக்கின்றது.’’

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டு மக்காவில் அவர்களுக்கு கிடைத்த உயர் பதவியைக் கைவிட்டு விட்டார்கள்.’’

அவர்கள் மக்காவின் தலைவராக ஆகியிருக்க முடியும். அதனை அவர்கள் விட்டு விட்டார்கள். ஆனால், அல்லாஹ் அவர்களுக்கு ஓர் உலகின் அரசாட்சியை வழங்கினான். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு போர்வையை போர்த்தி கொண்டார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் ஏழ்மையின் நிலையில் வாழ்க்கையைக் கழிக்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. அந்த அளவு செல்வம் அவர்களிடம் இருக்கவில்லை. ஆனால், அவர்கள் எல்லாவற்றையும் அவனது வழியில் துறந்து விட்டார்கள். இப்போது என்ன நடந்தாலும் நடக்கட்டும்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 9 JUNE 2016 Issue No. 14

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

நாம் கப்பலைக் கடலில் போட்டு விட்டோம் என்பதற்கு ஒப்பாக அவர்களது நிலை இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டார்கள். அல்லாஹ் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நற்கூலியிருந்தது எதையாவது எஞ்சியிருக்கும்படி விட்டு வைத்தானா? ஒருபோதும் இல்லை. எவர் இறைவனுக்காக தன்னிடம் சிறிய அசைவை ஏற்படுத்துகின்றாரோ அவர் அதற்கான நற்கூலியைப் பெறாத வரை மரணிப்பதில்லை. அசைவது நிபந்தனையாகும்.''

அதாவது தாமே செயல்பட வேண்டியது அவசியமானதாகும். தாமே முன்னேறிச் செல்ல வேண்டும். பிறகு இறைவன் அப்படிப்பட்டவருக்கு வழங்குகின்றான். ஒரு ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது: அதாவது, எவர் அல்லாஹ்வின் பக்கம் சாதாரணமாக நடந்து வருவாரோ அல்லாஹ் அவர் பக்கமே ஓடி வருகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''சில விஷயங்கள் மறைவானதாக இருக்கும்போதே ஏற்றுக் கொள்வதுதான் ஈமானாகும். முதல் நாள் பிறையைக் காண்பவரின் பார்வையே கூர்மையானதாக இருக்கின்றது. ஆனால், பதினான்காவது இரவில் தோன்றும் நிலவைப் பார்த்துவிட்டு நான் நிலவைப் பார்த்து விட்டேன் என்று கூறுபவர் பைத்தியக்காரர் என்றே அழைக்கப்படுவார்.''

(மல்.ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 25-26; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நமது ஈமானை மிகவும் வலுப்படுத்தக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டவாறு அவனது திருப்தியைப் பெறக் கூடியவர்களாக நாம் ஆவோமாக! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் உரிமையை நிறைவேற்றுபவர்களாக நாம் ஆவோமாக! தமது செயல் மூலம் உலகிற்கு உண்மையின் வழியைக் காட்டக் கூடியவர்களாக நாம் ஆவோமாக! அல்லாஹ் நம்மீது செய்துள்ள பேரருளுக்கு உண்மையான முறையில் நன்றி செலுத்துபவர்களாக நாம் ஆவோமாக! அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

## வெளி வேஷம் ஒரு நோயாகும். பெரிய அளவில் அதன் அபாயகரமான விளைவுகள் வெளிப்படுகின்றன

*ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:*

*நன்மைகளைச் செய்வதில் அவற்றை போதுமானதாகக் கருதும் நிலை, சோம்பல் மற்றும் பலவீனம் இருக்கக் கூடாது. நமது பணி நன்மைகளில் முன்னேறுவதாகும். ஆனால், அத்துடன் அதில் வெளி வேஷம் இருக்கக் கூடாது என்பதை கண்டிப்பாக நினைவில் வையுங்கள். பல மக்களும் தாங்கள் செய்கின்ற பணிகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு விரும்புகின்றனர். அவர்கள் செய்த பணிகளை மீண்டும் மீண்டும் பாராட்டிப் புகழ்ந்து கூற வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், இது ஒரு நோயாகும். அது மறைவாக இருக்கின்றது. பெரிய அளவில் அதன் அபாயகரமான விளைவுகள் வெளிப்படுகின்றன. இந்த விஷயம் முபல்லிக்குகளிடம் கூட இருக்கின்றது. அவர்கள் அறிக்கையை எழுதி அனுப்புகின்றனர். பத்திரிகைகளில் அது வெளி வராமல் இருந்தால் எங்களது அறிக்கை வெளி வருவதற்குள்ள உரிமை எங்களுக்கு இல்லையா? என்று கேட்டு பத்திரிகையை நடத்துபவர்களுக்கு கடிதம் எழுதுகின்றனர். அறிவுரை கூறுபவர்களிடமும் இந்த விஷயம் இருக்கின்றது. இதன் விளைவாக அவர்களது உள்ளங்களில் துருப்பிடித்து விடுகின்றன. அவர்கள் செய்த பணிகள் புகழ்ந்து கூறப்பட வேண்டும் என்று விரும்புகின்ற பல அஞ்சுமன்கள் இருக்கின்றன. அவர்கள் பெரும் பணியைச் செய்துள்ளனர் என்று மக்கள் கூற வேண்டும் என்பதற்காக அவர்கள் தமது பணியை பிறருக்கு வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். ஆனால், அவ்வாறு செய்பவர்கள் எதையுமே செய்யவில்லை. மற்றவர்களைப் பணி செய்ய வைப்பதற்காகவும் அவர்கள் பணி செய்வதற்கு தூண்டுவதற்காகவும் ஒருவருக்கு தான் செய்த பணியைக் காட்டுவது என்பது வேறு விஷயமாகும். அவர்கள் பெரிய பணியைச் செய்தனர் என்று மற்றவர்களது நாவிலிருந்து கேட்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்யக் கூடாது. எனவே, நம்பிக்கை கொண்டவர் வெளி வேஷத்திலிருந்து தப்பிக்க வேண்டும். இறைவனின் நெருக்கத்தை வெளி வேஷத்தின் மூலமாக பெற்று விட முடியாது.*

*(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 5, பக்கம் 526-527*
*அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் ஏப்ரல் 2016, பகம் 11)*

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

(6) قوله تعالیٰ - وَمَنْ يَّعْصِ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَيَتَعَدَّ حُدُوْدَهٗ يُدْخِلْهُ نَارًا خَالِدًا فِيْهَا وَلَهٗ عَذَابٌ مُّهِيْنٌ

அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்படாமல் அவன் (ஏற்படுத்திய) வரம்புகளை மீறுபவரை அவன் நரகத்தில் நுழையச் செய்வான். அவர் அதில் என்றென்றும் இருந்து கொண்டிருப்பர். அவர் மீது இழிவுபடுத்தக்கூடிய தண்டனை இறங்கும். (4:15)

இப்போது பாருங்கள்! தூதருடன் உள்ள உறவைத் துண்டித்துக் கொள்பவருக்கு இதை விட அதிகமாக வேறு என்ன எச்சரிக்கை இருக்க முடியும்? எந்த நபர் தூதருக்குக் கட்டுப்படாமல் இருக்கின்றாரோ அவருக்கு நிரந்தரமான நரகம் பற்றிய வாக்குறுதி தரப்பட்டிருக்கின்றது என்று இறைவன் கூறுகின்றான். ஆனால், மியான் அப்துல் ஹகீமோ ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொய்ப்படுத்தக் கூடியவராகவும், அவர்களுக்கு கட்டுபடாதவராகவும் இருந்தாலும் கூட அவர் தவ்ஹீதில் நிலைத்திருந்தால் சந்தேகமின்றி அவர் சொர்க்கத்திற்குச் செல்வார் என்று கூறுகின்றார். தவ்ஹீதின் தலையூற்றாக இருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்த்து அவர்களுக்கு கட்டுப்படாமல் இருக்கும் நிலையில் சொர்க்கம் வரை ஒருவரைக் கொண்டு செல்கின்ற எவ்வகையிலான தவ்ஹீது அவரது முதுகில் இருக்கின்றது என்று எனக்குத் தெரியவில்லை. ல.ஃனத்துல்லாஹி அலல் காதிபீன் (பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்).

(7) قوله تعالیٰ - وَمَآ اَرْسَلْنَا مِنْ رَّسُوْلٍ اِلَّا لِيُطَاعَ بِاِذْنِ اللّٰهِ

நாம் ஒவ்வொரு நபியையும் அல்லாஹ்வின் கட்டளையினால் அவருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதற்காகவே அனுப்பியுள்ளோம். (4:65)

இந்த வசனத்திலுள்ள கருத்திற்கேற்ப தூதர் கட்டுப்பட்டு நடப்பதற்கு தகுதியுள்ளவர் ஆவார் என்று தெளிவாகத் தெரிகின்றது. எவர் நபிக்கு கட்டுப்படுவதிலிருந்தும் வெளியில் நிற்கின்றாரோ அவரால் எவ்வாறு இரட்சிப்பை பெற முடியும்?

(8) قوله تعالیٰ - قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ۝ قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ ۚ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْكٰفِرِيْنَ ۝

நீர் கூறுவீராக, மக்களே! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் அருள் செய்பவனுமாவான்.

நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். அவர்கள் கட்டுப்படுவதிலிருந்து முகம் திருப்பிச் சென்று விட்டால் பிறகு அல்லாஹ் நிராகரிப்பவர்களை ஒருபோதும் நண்பராக்கிக் கொள்வதில்லை. (3:32-33)

இந்த வசனங்களிலிருந்து பாவங்கள் மன்னிக்கப்படுவதும் இறைவனது அன்பைப் பெறுவதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்வதுடன் தொடர்புடையதாக இருக்கின்றது என்பது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. மேலும் எவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளவில்லையோ அவர்கள் நிராகரிப்பவர்களாவர் என்பதும் தெரிய வருகின்றது.

(ஹகீக்கதுல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22. பக்கம் 127-130)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad